அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 80/2017

தேதி : 01/09/2017

## மாணவியின் தற்கொலை, மருத்துவ கனவு தகர்ந்தது.
## நீட் தேர்வு விவகாரத்தில் அலட்சியம் காட்டும் மத்திய அரசு

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் மீண்டும் வலியுறுத்தல்.

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த அனிதா என்ற மாணவி பிளஸ்-2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றும் நீட் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாததால் மருத்துவ கல்லூரி சேர்க்கையில் இடம் கிடைக்காத அதிர்ச்சியில் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகவும், கவலை அளிப்பதாகவும் உள்ளது.

ஒரு மாணவியின் தற்கொலை கோழைத்தனமானது, தவிர்த்திருக்க வேண்டும் என்றெல்லாம் இம்மாணவியின் தற்கொலையை நியாயப்படுத்தி விடமுடியாது. நீட் தேர்வை அறிமுகப்படுத்துவதன் மூலம், கிராமப்புற மாணவர்கள் இத்தேர்வை எழுதி தேர்ச்சி பெறுவது கடினம் என்பதை அரசியல்வாதிகளும், கல்வியாளர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் பெற்றோர்களும் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே வந்தார்கள். அக்கருத்து உண்மை என்பதை ஒரு மாணவியின் மரணம் நிரூபித்துள்ளது.

நீட் தேர்வு அவசியமானது என்றாலும் தமிழக மாநில பாடத்திட்டத்தில் பயின்றுவரும் மாணவர்கள் சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்திற்கு ஏற்ப தரம் உயர்த்தப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு போட்டித் தேர்வில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக சில ஆண்டுகள் குறிப்பாக இந்த ஆண்டு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றியும், அவசர சட்டம் இயற்றியும் தங்களின் கோரிக்கையை முன்வைத்தது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மாணவி அனிதாவின் தற்கொலை மத்திய அரசு காட்டிய பிடிவாதத்தின் விளைவு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த மரணம் ஒரு மாணவியின் மௌனக் குரலாக மட்டுமே எடுத்துக்கொள்ள கூடாது. ஒட்டு மொத்த மாணவ சமுதாயத்தின் மனப்புழுக்கத்தின் அடையாளம் என்றே கருதவேண்டும். இந்த மாணவியின் தற்கொலைக்கும் ஒட்டுமொத்த மாணவ சமுதாயத்தின் மன அழுத்தத்திற்கும் அதன் காரணமாக பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கும் மத்திய அரசே பொறுப்பேற்கவேண்டும். பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றும் ஒரு மாணவிக்கு அவள் விரும்பிய துறையில் படிக்க வாய்ப்பு கிடைக்காதது மாணவியின் குற்றமா அல்லது மத்திய அரசின் கல்விக்கொள்கையின் குற்றமா என்ற கேள்வி விடை கிடைக்காமலேயே தொலைந்துவிட்டது. இதன் மூலமாவது கல்வி கொள்கைகளை வகுப்பவர்கள் தகுந்த சீர்திருத்த நடவடிக்கைகளை இனிமேலாவது மேற்கொள்ளவேண்டும் என்று அரசுகளை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மாணவி அனிதாவின் மரணம் என் குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பு போல கருதி, அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**

தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com